## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி - ஒன்பதாம் பத்து
**(ஆபத்துக்குதவும் நண்பனான ஸர்வேஷ்வரனாலே 'கீழ்ப்பத்தில் பெற்ற ஆத்மதர்சனத்தின் பலனாக நீர் என்னை அடைவது இந்த தேஹத்தின் முடிவிலே' என்று நாளிட்டுக் கொடுக்கப் பெறுதல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-1 - கொண்டபெண்டிர்
**('கர்மத்தால் ஏற்பட்ட உறவினரை விட்டு, இயற்கை உறவினனாய் அடியார்க்கு ஆட்படுத்தும் எம்பெருமானை பற்றுங்கள்' என்று ஆழ்வார் பிறர்க்கு உபதேசித்தல்)**

3557 * கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் * சுற்றத்தவர் பிறரும் *
கண்டதோடு பட்டதல்லால் * காதல் மற்று யாதும் இல்லை **
எண்திசையும் கீழும் மேலும் * முற்றவும் உண்ட பிரான் *
தொண்டரோமாய் உய்யல்[1] அல்லால் * இல்லை கண்டீர் துணையே 1

3558 துணையும் சார்வும் ஆகுவார் போல் * சுற்றத்தவர் பிறரும் *
அணைய வந்த ஆக்கம் உண்டேல் * அட்டைகள் போல் சுவைப்பர் **
கணை ஒன்றாலே ஏழ்மரமும் எய்த * எம் கார்முகிலை *
புணை என்று உய்யப் போகல் அல்லால் * இல்லை கண்டீர் பொருளே 2

3559 பொருள் கையுண்டாய்ச் செல்லக் காணில் * போற்றி என்று ஏற்றெழுவர் *
இருள்கொள் துன்பத்தின்மை காணில் * என்னே! என்பாருமில்லை **
மருள்கொள் செய்கை அசுரர் மங்க * வடமதுரைப் பிறந்தாற்கு *
அருள்கொள் ஆளாய் உய்யல்[2] அல்லால் * இல்லை கண்டீர் அரணே 3

3560 அரணம் ஆவர் அற்றகாலைக்கு * என்றென்று அமைக்கப்பட்டார் *
இரணம் கொண்டதெப்பர் ஆவர் * இன்றி இட்டாலும் அஃதே **
வருணித்தென்னே? * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
சரணென்று உய்யப் போகல்[3] அல்லால் * இல்லை கண்டீர் சதிரே 4

3561 சதுரம் என்று தம்மைத் தாமே * சம்மதித்து இன்மொழியார் *
மதுர போகமது உற்றவரே * வைகி மற்றொன்று உறுவர் **
அதிர்கொள் செய்கை அசுரர் மங்க * வடமதுரைப் பிறந்தாற்கு *
எதிர்கொள் ஆளாய் உய்யல்[4] அல்லால் * இல்லை கண்டீர் இன்பமே 5

3562 இல்லை கண்டீர் இன்பம் அந்தோ! * உள்ளது நினையாதே *
தொல்லையார்கள் எத்தனைவர் * தோன்றிக் கழிந்தொழிந்தார்? **

[1] உய்யில்
[2] உய்யில்
[3] போகில்
[4] உய்யில்

மல்லை மூதூர் * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
சொல்லி உய்யப் போகல் அல்லால்[5] * மற்றொன்று இல்லை சுருக்கே 6

3563 மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் * மாநிலத்து எவ்வுயிர்க்கும் *
சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும் * கண்டீர்கள் அந்தோ! **
குற்றமன்று எங்கள் பெற்றத் தாயன் * வடமதுரைப் பிறந்தான் *
குற்றமில் சீர்கற்று வைகல் * வாழ்தல் கண்டீர் குணமே 7

3564 வாழ்தல் கண்டீர் குணம் இதந்தோ? * மாயவன் அடிபரவி *
போழ்து போக உள்ளகிற்கும் * புன்மை இலாதவர்க்கு **
வாழ்துணையா * வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே *
வீழ்துணையாப் போமிதனில் * யாதுமில்லை மிக்கதே 8

3565 யாதுமில்லை மிக்கதனில் * என்றென்று அது கருதி *
காது செய்வான் கூதை செய்து * கடைமுறை வாழ்க்கையும் போம் **
மாதுகிலின் கொடிக்கொள் மாட * வடமதுரைப் பிறந்த *
தாது சேர்தாள் கண்ணன் அல்லால் * இல்லை கண்டீர் சரணே 9

3566 கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் * சரண் அது நிற்க வந்து *
மண்ணின் பாரம் நீக்குதற்கே * வடமதுரைப் பிறந்தான் **
திண்ணமா நும்முடைமை உண்டேல் * அவனடி சேர்ந்து உய்ம்மினோ *
எண்ண வேண்டா நும்மதாதும் * அவனன்றி மற்றில்லையே 10

3567 * ஆதுமில்லை மற்றவனில் * என்றதுவே துணிந்து *
தாதுசேர் தோள் கண்ணனைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீதிலாத ஒண்தமிழ்கள் * இவை ஆயிரத்துள் இப்பத்தும் *
ஓத வல்ல பிராக்கள் * நம்மை ஆளுடையார்கள் பண்டே 11

**அடிவரவு:** கொண்ட துணை பொருள் அரண் சதுரம் இல்லை மற்றொன்று
வாழ்தல் யாது கண்ணன் ஆது பண்டை

---
[5] உய்யிலல்லால்